# செவிச்செல்வம்

# "Diploma in Community Radio & Mass Communication"

# Radio Enabled Learning

August -2019

STUDY MATERIAL

## CHAPTER 7 - COMMUNITY RADIOS OF DIFFERENT REGIONS IN INDIA

SRUTHI CRS 90.8 MHz

Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# BEST PRACTICE EXAMPLES
# இந்திய சமுதாய வானொலி நிலையங்களின் சிறந்த நடைமுறைகள்

CHAPTER- 7

EPISODE- 36

SRUTHI CRS 90.8 MHz

Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# சிறந்த நடைமுறைகளுக்கு எடுத்துகாட்டுகள் (Examples of Best Practices)

முன்னுரை

- சமுதாய வானொலி நிகழ்ச்சியின் முலம் நேயர்களுக்கு செறிவான அறிவாற்றலை உருவாக்கி தருதல்.
- சமுதாய வானொலி நிகழ்ச்சியின் மூலம் பல முற்போக்கான நடைமுறைகளை ஏற்றுக்கொள்ளவும், நடைமுறைப்படுத்தவும் செய்தல்.
- பல்வேறு பகுதிகளில் செயல்படும் சமுதாய வானொலி நிலையங்களைப் பற்றி அறியச்செய்தல்.
- பெண்கள் மேம்பாடு பற்றி விழிப்புணர்வு அளித்தல்.

# கர்ப்பிணி பெண்களுக்கான நிகழ்ச்சிக்கள்.

- கே.வி.கே பிரவரா (K.V.K pravara) என்னும் வானொலி நிலையத்தில் பெண்களின் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து குறித்த அறிவியல் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.
- இந்த நிகழ்ச்சியின் மூலம் கர்ப்பிணி பெண்கள் ஊட்டச்சத்துமிக்க உணவுகளை உட்கொள்வது பற்றி தெரிந்து கொண்டனர்.
- கர்ப்பிணி பெண்கள் ஆலோசனைகளையும், பரிசோதனைகளையும் பெற்று சுகப்பிரசவம் அடைந்தனர்.
- பிரசவம் குறித்து விழிப்புணர்வு பெற்றனர்.

# “பசுமை” சமுதாய வானொலி
# “Pasumai” Community Radio

- “ பசுமை ” என்ற சமுதாய வானொலி தமிழ் நாட்டில் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ளது.
- பசுமை சமூதாய வானொலி நிலையம் திண்டுக்கல்லில் உள்ள சவுராஷ்ரா மக்களுக்காக நிகழ்ச்சியை ஒலிபரப்பியது.
- நெசவாளர்களான சவுராஷ்ரா மக்களின் மனஅழுத்தத்தை அது நிவர்த்தி செய்தது.
- அவர்களுடைய வேலை சுமையை எளிதாக்கியது.

# “ரேடியோ தென்றல்”சமுதாய வானொலி [Radio Thendral ]

- சென்னையில் “ரேடியோ தென்றல்” என்னும் சமுதாய வானொலி இயங்கி வருகிறது.
- இந்த வானொலி நிகழ்ச்சியில் மீனவப்பெண்கள் பங்குப் பெற்றனர்.
- இதன் மூலம் அவர்கள் அதிகாரம், ஆளுமை பெற்றதுடன் மனவலிமையையும் பெற்றனர்.
- உறவினர்கள் மத்தியில் அங்கீகாரம் பெற்றனர்.
- கணவர்மார்களும் அவர்களுடைய திறமைகளை அங்கீகரித்தனர்.

# “ ரேடியோ ஆக்டிவ்”சமுதாய வானொலி [Radio Active]

- பெங்களூரில் “ரேடியோ ஆக்டிவ்” என்னும் வானொலி நிலையம் இயங்கி வருகிறது.
- திருநங்கைகள் அந்த வானொலி நிகழ்ச்சியில் பங்கு பெற்றனர்.
- திருநங்கைகளுக்கென்று அங்கிகாரம் கிடைத்தது.
- அவர்களுடைய எண்ணங்களை மக்கள் தெரிந்து கொள்ள இந்நிகழ்ச்சி ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுத்தது.

# “யரலவாணி” சமுதாய வானொலி [Yeralavani Community Radio]”

- மகாராஷ்டிராவில் “யரலவாணி” என்னும் சமுதாய வானொலி இயங்கி வருகிறது.
- வறட்சியால் பாதித்த விவசாயிகளுக்காக இந்த வானொலி நிலையம் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பியது.
- பாதித்த விவசாயிகாளுக்கு “டிரேகான்ப்ருட்” (Dragon fruit) என்னும் பயிரை பற்றி விளக்கியது.
- இதன் மூலம் விவசாயிகள் பலன் பெற்றனர்.

# “சியாமளவாணி” சமுதாய வானொலி [Shyamalavani Community Radio]”

- “சியாமளவாணி” என்னும் சமுதாய வானொலி நிலையம் மதுரையில் இயங்கி வருகிறது.
- இந்த வானொலியில் “தனம்” என்னும் ஆரம்பப்பள்ளியில் வேலை செய்யும் தொழிலாளி ஈடுபட்டார்.
- அந்தத் தொழிலாளியின் திறனைக் கண்டுபிடித்து அவரை “எரலபதி” என்னும் கிராமத்திற்கு தலைவராக வரச்செய்தனர்.
- அவரின் ஆளுமைத் திறனை வளர்த்ததில் இந்தச் சமுதாய வானொலி நிலையத்திற்குப் பெரும்பங்கு உண்டு.

# வெகுசன ஊடகம் மற்றும் சமுதாய வானொலி [IIMC  and Community Radio]

- வெகுசன ஊடக நிறுவனம் சமுதாய  வானொலியை  முதலில்  துவக்கியது.
- ஐ.ஐ.எம்.சி  யின்  வாளாகம்  ஜவஹர்லால்  நேரு  பல்கலைகழகம், ஐ.ஐ.டி. , குத்தப்மினார் , என்.சி.இ.ஆர்.டி  போன்ற  முக்கியமான  இடங்களில் அமைந்துள்ளது.
- 50 வருடத்திற்கு மேலாகச் சேவையாற்றி வருகிறது.
- சிறப்பான  உள்கட்டமைப்பு,  வகுப்பறைகள்,  மாநாட்டு  மண்டபங்கள்,  அரங்கவசதி, விடுதிகள், விருந்தினர் மாளிகை மற்றும் போதிய வாகனங்கள்  நிறுத்தும்  இடத்துடன் பசுமையுடன்  விளங்குகிறது.

# “ ஆப்னா சி ஆர்” [Apna CR 96.9 MHz]

- [Apna CR 96.9 MHz] புது டெல்லியில் உள்ள “ஆப்னா சி ஆர்” 96.9 MHz என்னும் சமுதாய வானொலி நிலையம் 2005 - இல் IIMC – வளாக வானொலியாகத் துவக்கப்பட்டது.
- அதனுடைய வழக்கமான முழுநேர ஒலிபரப்பு 2013இல் ஆரம்பிக்கப்பட்டது. ஒரு நாளைக்கு 7 மணி நேரம் நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகிறது.
- இந்த சமுதாய வானொலி நிலையம் “ஆப்னி ஆஸ் பாஸ்” [Apne Sad Pass] என்னும் அலைபேசி மூலம் நேரடி ஒலிபரப்பையும் செய்கிறது.
- சமுதாய மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

# சமுதாய நிறுவனங்களுடன் தொடர்பு

- ”ஆப்னா சி ஆர்”சமுதாய வானொலி சமுதாய நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டது.

- நிறுவனங்கள் - சேட்னா, மக்கள் மற்றும் இளைய சமுதாய வளர்ச்சிக்கான அமைப்பு, கேன் சப்போர்ட், மூத்த குடிமக்கள் நலதிட்ட அமைப்பு, அறிவியல் சுற்றுச்சூழல் போன்ற அமைப்புகளாகும்.

- “ஆப்னா சி ஆர்” தென்கனல் , ஒடிசா , அமராவதி , மகாராஷ்டிரா , கோட்டையம் , கேரளா , ஜம்மு போன்ற இடங்களில் துவக்கப்பட்டது.

# தொழில் மேலாண்மை பயிற்சி

- கே.ஜி. சுரேஷ் பொது இயக்குனராகப் பதவி ஏற்றார்.
- அவர் பதவி ஏற்ற பிறகு “ஆப்னா சி ஆர்” வேகமாக வளர்ச்சிப் பெற்றது.
- சமுதாய வானொலியில் பணிபுரிபவர்களுக்குத் தொழில் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டது.
- அத்துறையில் விருப்பம் உள்ளவர்களுக்கு தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை குறித்துப் பயிற்சி அளிக்கப்பட்டது.

# “ஐ.ஐ,எம்.சி” மற்றும் “யுனெஸ்கோ” [IIMC and UNESCO]

- யுனெஸ்கோ [UNESCO] போன்ற சர்வதேச அமைப்புகள் சில பயிற்சி நிகழ்ச்சிக்ளைச் சமூக அமைப்புகள் மூலம் அளித்தது.
- “ஐ.ஐ.எம்.சி” [IIMC] தேசிய வைப்பு நிலையமாக அமைக்கப்பட்டு தேவையான சமுதாய வானொலி நிலையங்களுக்கு இலவசமாக வழங்க முடிவு செய்யப்பட்டது.
- IIMC - இல் இந்தியாவில் உள்ள பல்வேறு சமுதாய நிலையங்களில் ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் சேகரித்து வைக்கப்படுகிறது.
- இந்த சமுதாய வானொலி அதிகார மற்றும் வளநிறுவனம் [Community Radio Empowerment & Resource Centre] அப்போதைய ஐ & பி [Information & Broadcasting] செயலாளர் ஸ்ரீ அஜய் மிட்டல் மற்றும் ஸ்ரீ கே ஜி சுரேஷ் என்பவர்களால் மார்ச் 29, 2017இல் துவக்கி வைக்கப்பட்டது.